*57*

# "புதிய மற்றும் பழைய விஷயங்கள்"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #23*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

N. *யூதேயாவில் பிந்திய கால ஊழியம் (தொடர்ச்சி).*

*6. இயேசுவும் திரளான கூட்டத்தாரும் (லூக். 12:1, 13, 54; 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்) (தொடர்ச்சி).*

b. *பொருள்முதல்வாதம் பற்றி போதனை (லூக். 12:13-34).*

c. *விழித்திருத்தல் பற்றிய போதனை (லூக். 12:35-48).*

d. *வரவிருந்த துன்பம் பற்றிய போதனை (லூக். 12:49-59).*

e. *மனந்திரும்புதல் பற்றிய போதனை (லூக். 13:1-9).*

*7. இயேசுவும் வியாதிப்பட்டிருந்த ஒரு பெண்ணும் (ஓய்வுநாள் பற்றி வாக்குவாதம்) (லூக். 13:10-21).*

O. *பிரதிஷ்டையின் பண்டிகை (லூக். 13:22; யோவா. 10:22).*

*1. அவரது விரோதிகளுடன் முரண்பாடு தொடருதல் (யோவா. 10:23-30).*

*2. அவரைக் கொலை செய்யும் முயற்சிகள் தொடருதல் (லூக். 10:31-39).*

P. *பெரேயாவில் ஊழியம்.*

*1. "யோர்தானுக்கு அப்பால்" இயேசுவின் ஊழியம் (மத். 19:1, 2; மாற். 10:1; யோவா. 10:40-42; ஐக் காணவும்).*

*2. இயேசு கேள்வி கேட்கப்பட்டு எச்சரிக்கப்படுதல் (லூக். 13:23-35).*

### அறிமுகம்

இந்தப் பாடத்தில் நாம், பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் இயேசுவின் முடிவு ஊழியத்தைப் பற்றிய நமது ஆய்வைத் தொடருவோம். நாம் யூதேயாவில் பிந்திய கால ஊழியத்தைப் பற்றிப் படித்து முடித்து, கர்த்தரை எருசலேமில் பிரதிஷ்டைப் பண்டிகையில் கண்டு, பின்பு அவரது

பெரேயா ஊழியம் பற்றி ஒரு படிப்பைத் தொடங்குவோம்.

கிறிஸ்துவின் விரோதிகளின் பகையுணர்வு வலுவாகுகையில், அவர் தமது சீஷர்களுக்கு அவர்கள் அறிந்திருக்க வேண்டியவைகளைப் போதித்தல் என்ற தமது முயற்சிகளை இருமடங்காக்கினார் (லூக். 12:22ஐக் காணவும்). இந்தக் காலகட்டத்தில் போதனையின் விரிவளவும் தரமும் ஏறக்குறைய மூழ்கடிக்கச் செய்வதாக இருக்கின்றன. தலை சுற்றும் வேகத்தில் சத்தியத்திற்கு மேல் சத்தியம் குவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போதனையில் பெரும்பாலானவை முன்பு கலிலேயாவில் தரப்பட்ட சத்தியங்களை மறுபடி கூறுதலாகவே இருந்தது.[1] முன்பே குறிப்பிட்டபடி, அவரது உரையைக் கேட்டவர்கள் மாறுபட்டவர்களா யிருந்ததால் இது எதிர்பார்க்கப்பட்டதாகவே இருந்தது. அத்துடன் கூடுதலாக, அவருடன் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் இந்த சத்தியங்களை மீண்டும் மீண்டும் கேட்பது அவசியமாயிருந்தது (நமக்கும் கூட இது அவசியமாக உள்ளது; 2 பேது. 1:12, 13, 15; 3:1). இருப்பினும், இந்த வேளையில் அவர் கூறியவற்றில் ஒரு பகுதி புதியதாயிருந்தது. எடுத்துக்காட்டாக, நமது தற்போதைய வேத பாடப் பகுதி, நாம் இதற்கு முன்பு படித்திராத பல உவமைகளைக் கொண்டுள்ளது.

முன்னதாக, கிறிஸ்து "தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷன்" என்ற விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார் (மத். 13:52). இந்தப் படிப்பில் நாம், கர்த்தர் தமது பொக்கிஷத்திலிருந்து "பழைய" மற்றும் "புதிய" சத்தியங்களைக் கொண்டு வருவதைக் காண்போம்.

## பொருளாசைமீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 12:13-34)

### ஒரு வேண்டுகோள் (வ. 13-15)

இயேசு போதித்துக் கொண்டிருக்கையில் (12:1), அவர் இடைமறிக்கப் பட்டார்: "அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: 'போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டான்" (வ. 13). இப்படிப்பட்ட விஷயத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியிருந்தது (உபா. 21:15-17). கேள்விகள் எழும்போது, வழக்குகளின் வேற்றுமையைத் தீர்த்து வைத்தல் என்பது ரபீக்களின் சாதாரண வழக்கமாக இருந்தது. ஒருவேளை (பெரும் பாலானவர்கள் செய்தது போல்) இந்த மனிதரும், கிறிஸ்து ஒரு உலகப் பிரகாரமான ராஜ்யத்தை அமைப்பார் என்று எதிர்பார்த்து இருந்திருக்க லாம், இவர் விரைவிலேயே முடிசூட்டப்படவிருக்கும் அரசர், தனது குடும்ப வழக்கில் தன்சார்பாக இருக்கும்படிக்கு விரும்பியிருக்கலாம்.

இயேசு இம்மனிதரைக் கடிந்துகொண்டார் (வ. 14), பின்பு கூட்டத் தாரை, "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில்

*ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன்[2] அல்ல" என்று எச்சரித்தார் (வ. 15).* KJV*யில் "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: ஒருவனுடைய ஜீவன் அவன் கொண்டிருக்கும் திரளான ஆஸ்தியைப் பொருத்திருப்பதல்ல" என்றுள்ளது. "பேராசை" அல்லது "பொருளாசை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, "அதிகம் பொருள் கொண்டிருக்க வேண்டும் என்று விருப்பம்" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் இது புதிய ஏற்பாட்டில் "எப்போதுமே ஒரு மோசமான கருத்திலேயே [பயன்படுத்தப்பட்டுள்ளது].[3] மக்களில் பலர் அதிகம் பொருள் கொண்டிருக்க வேண்டும் என்ற அளவுக்குமீறிய விருப்பம் கொண்டுள்ளார்கள், இது ஒருக்காலும் நிறைவடையாத ஒரு விருப்பமாகவும், பிறருக்கு மாறாக சுயத்தையே மையங்கொண்ட ஒரு விருப்பமாகவும் உள்ளது. இதை வேதாகமம் "பொருளாசை" என்று அழைக்கிறது மற்றும் இதை வன்மையாகக் கண்டனம் பண்ணுகிறது (எபே. 4:19; கொலோ. 3:5; 1 கொரி. 5:11ஐக் காணவும்).*

**ஒரு உவமை *(வ. 16-21)***

*"தான் கொண்டிருந்த திரளான ஆஸ்தியில்" (வ. 15) ஜீவன் அடங்கியிருந்தது என்று நினைத்திருந்த ஒரு பணக்கார விவசாயியைப் பற்றிய உவமையொன்றைக் கிறிஸ்து கூறினார். இம்மனிதர் "மதிகேடனாக" இருந்ததாகத் தேவன் கூறினார் (வ. 20).[4]*

**ஒரு தோற்றக்காட்சி *(வ. 22-34)***

*பணக்கார மதியீனனைப் பற்றிய உவமையைத் தொடர்ந்து, வாழ்வில் ஏற்புடைய ஒரு கொள்கையை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை இயேசு கொடுத்தார். இவற்றில் அதிகமான அறிவுறுத்தல்கள் இதற்கு முன் மலைப்பிரசங்கத்திலேயே தரப்பட்டிருந்தன,[5] ஆனால் ஒரு சில புதிய தொடுதல்களும் இருந்தன. எடுத்துக்காட்டாக, ராஜ்யத்தை நாடும்படி கிறிஸ்து தமது உரையைக் கேட்டவர்களிடத்தில் வற்புறுத்தியபோது (வ. 31; இதை மத். 6:33உடன் ஒப்பிடவும்), அவர்களுக்குத் தேவன் ஒரு ராஜ்யத்தைக் கொடுப்பார் என்று உறுதிப்படுத்தினார் (வ. 32).[6]*

*மீண்டுமாக, மலைப் பிரசங்கத்தில் இயேசு, "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்" என்று தமது சீஷர்களுக்குக் கூறினார் (மத். 6:20அ). இப்பொழுது அவர்கள், எப்படி "பரலோகத்திற்குரிய சேமிப்புக் கணக்கு ஒன்றை"க் கொண்டிருக்க முடியும் என்று அவர் கூறினார்: "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை" (வ. 33).[7] ஒருவேளை நீங்கள், குளிரான, ஈரத்தரை கொண்ட ஒரு வீட்டில் வசிக்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்வோம், உங்கள் நண்பர் உங்களைக் காண வருகின்றார், அவர் உங்கள் வீட்டுத் தரையின்மீது அழிபடும் பொருட்கள் இருப்பதைக்*

காண்கின்றார்: துணிகள் நிறைந்த பெட்டிகள், விலையுயர்ந்த பழங்கால வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் இவை போன்றவைகள் அவ்வாறு இருப்பதை அவர் காண்கின்றார். அவற்றை மேல்மாடியில் உலர்ந்த சூழலுக்கு எடுத்துச் சென்றால் நல்லது என்று அவர் கூறும்போது, அவர் உங்களுக்கு நற்பயன் விளைவிக்கும் செயலைச் செய்தவராய் இருக்க மாட்டாரா?[8] உண்மையில் இயேசு, "உங்கள் பொக்கிஷங்களை நீங்கள் பாதுகாக்க விரும்பினால், அவற்றை *மேல்மாடியில்* சேர்த்து வையுங்கள்" என்றே கூறினார்.

பொருட்களை அதிகம் அதிகமாகச் சேர்த்துக் குவிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இருக்கும் உலகத்திற்கு, லூக்கா 12:13-34ன் பாடங்கள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. நம்மில் ஒவ்வொருவரும் இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டியது அவசியமாக இருக்கிறது: ''ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல''[9] பின்வருவதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: ஒரு மனிதர் [வாழ்வில்] பெறும் வெற்றி அல்லது தோல்வி என்பது அவரால் சேர்த்துக் குவித்துவைக்க முடிந்த உடைமைகளின் எண்ணிக்கையினால் அளக்கப்படுவதில்லை. "ஒரு மனிதரின் வாழ்வுக் கணக்கெடுப்பிற்கான அடிப்படையானது அவரது வியாபாரக் கணக்கிற்கான அடிப்படையைப் போன்றதாக இருப்பதில்லை.''[10] ஒரு மனிதர் கொண்டுள்ளவற்றிற்கும், அவர் என்னவாக உள்ளார் என்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

## ஆயத்தமான நிலைமீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 12:35-48)

**ஆயத்தமான நிலை உற்சாகப்படுத்தப்பட்டது (வ. 35-40)**

கிறிஸ்து, ''பரலோகத்தில் பொக்கிஷங்கள்'' பற்றிய தமது போதனையை, தாம் திரும்பி வருகையில் தமது சீஷர்கள் அந்தப் பரலோக இல்லிடத்திற்குச் செல்லத் தயாராயிருக்கும்படி அவர்களை உற்சாகப் படுத்தியதன்மூலம் தொடர்ந்தார்: "அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (வ. 40).[11]

எந்த வேளையிலும் தயாராயிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இயேசு, விவரிப்புகளின் வரிசையொன்றைப் பயன்படுத்தினார். இவ்விடத்தில் சிலர் தனித்தனியான நான்கு உவமைகளைக் காண்கின்றார்கள்:[12] காத்திருக்கும் வேலைக்காரர்கள் பற்றிய உவமை (வ. 36-38), இரவில் வரும் திருடன் பற்றிய உவமை (வ. 39),[13] விவேகமுள்ள உக்கிராணக்காரர் பற்றிய உவமை (வ. 42-46), மற்றும் அறியக்கூடிய மற்றும் அறியாமையுள்ள வேலைக்காரர்கள் பற்றிய உவமை (வ. 47, 48).

இவற்றில் முதலாவது உவமையில், வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர் எந்த வேளையில் திரும்பி வந்தாலும் தயாராக இருக்கும்படி

கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.[14] இந்த விவரிப்பில் இயேசு, "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள், அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ் செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (வ. 37). அடிமைகளுக்கு உரிமையாளர் ஒருவர் வேலைக்காரரின் மேலங்கியை அணிந்துகொண்டு தமது அடிமைகளுக்கு உணவு பரிமாறுதல் என்பதைக் கற்பனை செய்வதில் கிறிஸ்துவின் உரையைக் கேட்டவர்களுக்குச் சிரமம் இருந்திருக்கும் - ஆனால் இது, தேவன் தமக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களுக்குத் தாமே பலன் அளிப்பார் என்ற வியத்தகு சத்தியத்தைப் பிரதிபலிக்கிறது (மத். 25:21; யோவா. 14:1-3; வெளி. 21:4).

### பொறுப்பு வலியுறுத்தப்பட்டது (வ. 41-48)

வேலைக்காரர்களைப் பற்றிய இயேசுவின் போதனை பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்ததா அல்லது அது பேதுருவுக்கும் பிற அப்போஸ்தலர்களுக்கும் குறிக்கப்பட்டதா என்று பேதுரு வியப்படைந்தார் (வ. 41). இதற்குக் கிறிஸ்து இன்னொரு வேலைக்காரர் விவரிப்பைக் கொண்டு பதில் அளித்தார்.[15] அவர், ஊருக்குச் செல்லவிருந்த ஒரு எஜமானர் "பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி அவர்கள்மேல் அதிகாரியாக வைத்த விசாரணைக்காரனை" நியமித்தது பற்றிக் கூறினார் (வ. 42). இந்த விசாரணைக்காரர், தமது எஜமானர் திரும்பும்போது தமது பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றினால், இவருக்குப் பலன் அளிக்கப்படும் என்று கர்த்தர் கூறினார் (வ. 43, 44). இதற்கு மாறாக, இவ்விசாரணைக்காரர் தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால், இவர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார் (வசனங்கள். 45, 46[16]). தேவனுடைய மக்களுக்குத் தங்களைப் பொறுப்பாளிகளாகக் கற்பனை செய்துகொண்டு, ஆனால் அந்தப் பொறுப்பிற்கு உண்மையாயிருந்திராத (மத். 9:36; யோவா. 10:12ஐக் காணவும்) வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களுக்கு (மத். 23:2ஐக் காணவும்) நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்தாமல் இவ்வசனப் பகுதியை வாசித்தல் சிரமமானதாக இருக்கும்.

பின்பு கிறிஸ்து, "தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான்" என்று கூறினார் (வ. 47, 48அ). நரகத்தில் உள்ள தண்டனைகளின் பல்வேறு அளவுகளைப் பற்றி ஒரு புதிய போதனையை அறிவித்தல் என்பது அந்த வார்த்தைகளைப் பேசியதில் இயேசுவின் நோக்கமாக இருந்ததில்லை.[17] மாறாக அவர், சலுகையானது பொறுப்பைக் கொண்டு வருகிறது என்பதை வலியுறுத்தினார். அவர் தொடர்ந்து, "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" என்றும் கூறினார் (வ. 48ஆ). சலுகை எவ்வளவு அதிகமாக

இருக்கிறதோ, அவ்வளவுக்குப் பொறுப்பும் அதிகமாக உள்ளது (யாக். 3:1ஐக் காணவும்).

இயேசுவின் போதனை பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்ததா அல்லது விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்ததா என்ற பேதுருவின் கேள்விக்கு (லூக். 12:41), "அது இரண்டையுமே கொண்டிருந்தது" என்பதே செயல்விளைவான பதிலாக இருந்தது. இது தேவனால் விசேஷமாகக் கடமைகள் கொடுக்கப்பட்டுள்ள எவரொருவருக்கும் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தது. The New Living Translation என்ற வேதாகமம் கர்த்தரின் பதிலைப் பின்வருமாறு தரவழைக்கிறது: "எஜமான் கொடுத்த பொறுப்பிற்கு உண்மையுள்ள, கருத்துணர்வுள்ள *எந்த* ஒரு வேலைக்காரரையும் பற்றி நான் பேசுகின்றேன் ..." (வ. 42). ஆயினும், இந்த உவமையானது பேதுருவுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் *விசேஷித்த* நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தது என்று அவர்கள் உணர்ந்தறிய வேண்டும் என்று பகுத்துணர்ந்தார்கள். அவர்களுக்குக் கர்த்தர் "அதிகம்" கொடுத்திருந்தார்; ஆகையால் அவர்களிடம் "அதிகம்" கேட்கப்படும். நீங்களும் நானும் கூட, லூக்கா 12:47, 48 வசனங்கள் நமக்குப் பேசுகின்றன என்பதை உணர்ந்தறிய வேண்டும்: தேவன் நம்மிடத்தில் அதிகம் கொடுத்திருப்பதில்லையா?[18] ஆகையால், நம்மிடத்தில் அதிகம் கேட்கப்படாதா? "காதுள்ளவன் கேட்கக் கடவன்" (வெளி. 2:7அ).

## புறக்கணித்தல்மீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 12:49-59)

**புறக்கணித்தல் சமாதானத்தை அழிக்கிறது (வ. 49-53)**

இயேசு தமது மறுவருகையைப் பற்றிப் பேசுகையில் (12:40), அதற்கு முன் நடைபெற வேண்டியிருந்த அவரது மரணம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை நினைவூட்டினார் என்பது உறுதி: "பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" (வ. 49, 50). "ஸ்நானம்" என்பது அவரது துன்புறுதலின் முழுக்காட்டுதலைக் குறித்தது.[19] சிலுவையின் கொடும் தண்டனையானது தமக்குப் பின்னால் இருக்கும்படி கிறிஸ்து விரும்பினார். A. T. இராபர்ட்ஸன் அவர்கள், "இந்த வெடிப்பானது ... இரட்சகரின் இருதயத்தில் பூட்டப்பட்டிருந்த உணர்வுகளின் எரிமலையைப் பற்றிய சிறு காட்சியை நாம் காண உதவுகிறது" என்று எழுதினார்.[20]

"பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்" என்பது அவரது ஊழியத்தின் அக்கினிமயமான விளைவுகளின் குறிப்பைக் கொண்டிருந்தது. இயேசு தொடர்ந்து, "நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார்

*(வ. 51; மத். 10:34யும் காணவும்). கிறிஸ்து கூறியதை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். அவர் பிரிவினையையல்ல, சமாதானத்தையே விரும்பினார். அவர் தமது சீஷர்கள் "ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயிருக்க" வேண்டும் என்று வற்புறுத்தினார் (மாற். 9:50). கர்த்தருடைய சீஷர் ஒவ்வொருவரும், "யாவரோடும் சமாதானமாயிருக்க" வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளனர் (எபி. 12:14).[21] அதே வேளையில், அவரைச் சிலர் ஏற்றுக்கொள்வார்களென்றும் மற்றவர்கள் அவரைப் புறக்கணிப்பார்கள் என்றும் அவர் அறிந்திருந்தார் - அது பிரிவினையைக் கொண்டுவரும்.*

> *"எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார்" (லூக். 12:52, 53; மத். 10:35, 36ஐக் காணவும்).*

*உங்களில் சிலர், நான் எப்போதும் இவ்வசனப்பகுதியைப் புரிந்து கொள்வதைக் காட்டிலும் அதிகமாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட பிரிவினை நடைபெறும் இடங்களில் எல்லாம், அது கர்த்தருடைய இருதயத்தை உடைந்துபோகச் செய்கிறது.*

***புறக்கணித்தல் கூருணர்வை அழிக்கிறது (வ. 54-59)***

*கிறிஸ்து கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த பலர் ஏற்கனவே அவரைப் புறக்கணித்திருந்தார்கள் (வ. 56). இவர்கள் பலவீனமான நியாயத்தீர்ப்பின் குற்ற உணர்வுடன் இருந்ததாக அவர் கூறினார் (வ. 57). இவர்கள், அவர்தாம் மேசியாவாக இருந்தார் என்பதை நிரூபிக்கும் - அவரது அற்புதங்கள், அவரது வாழ்வு, மற்றும் அவரது போதனை போன்ற - "அடையாளங்களை நிதானிக்க" இயலாதவர்களாயிருந்தார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார் (வ. 54-56; மத். 16:2, 3காண்க). ஒருவேளை, குடும்பப் பூசல் ஒன்றை அவர் தீர்த்து வைக்க வேண்டும் என்று விரும்பிய மனிதரை அவர் நினைவில் கொண்டுவந்து, பிறருடன் நன்கு கலந்து பழகிச் செல்லுதல் அவர்களுக்கு அவசியமானது என்று அவர் கூறியிருக்கலாம் (வ. 58, 59; மத். 5:25, 26உடன் ஒப்பிடவும்). ஒரு மனிதர் கர்த்தரைப் புறக்கணிக்கின்றபோது, அவரது சிந்திக்கும் செயல்முறையானது பாதிக்கப்படுகிறது.*

## *மனந்திரும்புதல்மீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 13:1-9)*

***மனந்திரும்பு அல்லது அழிந்துபோ (வ. 1-5)***

*இயேசு போதிக்கத் தொடருகையில் (வ. 1அ), அவர் மீண்டும் இடைமறிக்கப்பட்டார். "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை*

அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" என்று ஒரு குழுவினர் கொடுத்த அறிக்கையினால் இடைமறிக்கப்பட்டார் (வ. 1).[22] கிறிஸ்து இந்த இடைமறித்தலை, மனந்திரும்புதல்மீதான போதித்தலுக்கான ஒரு வாய்ப்பாக மாற்றினார்:

> அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள். சீலோவாமிலே கோபுரம்[23] விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (வ. 2-5).

இங்கே குறிப்பிடப்பட்ட இரு துன்பங்களைப் பற்றியும் வரலாற்று வெளிச்சம் எதுவும் இருப்பதில்லை. இதில் பாதிக்கப்பட்டவர்கள் யாராயிருப்பினும், அவர்கள் அவ்வாறு துன்புற்றதற்கு, வழக்கத்திற்கு மாறான பெரும்பாவிகளாக இருந்திருக்க வேண்டும் என்று யூதர்கள் முடிவு செய்தார்கள். ஒரு தனிநபர் படுகின்ற துன்பத்தை வைத்து அவரது குற்றத்தை நாம் தீர்ப்பிட முடியாது என்று இயேசு தமது சீஷர்களுக்கு முன்னதாகப் போதித்திருந்தார் (யோவா. 9:3).[24] இப்போது அவர், எல்லாரும் பாவிகளாய் இருக்கின்றார்கள் (ரோமர் 3:23) மற்றும் ஆவிக்குரிய மரணத்திற்குத் தகுதியானவர்கள் (ரோமர் 6:23ஐக் காணவும்) என்று சுட்டிக்காண்பித்தார். "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" என்பதே அவரது முடிவாக இருந்தது (லூக். 13:3, 5). மனந்திரும்புதல் என்பது வாழ்வில் ஒரு மாற்றத்தை விளைவிக்கின்ற, மனதின் மாற்றமாக இருக்கிறது. இது, பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதை உணர்ந்து, எனவே ஒருவர் கர்த்தரின் துணையுடன் தமது வாழ்வை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தல் என்பதை உள்ளடக்கியிருக்கிறது. மனந்திரும்புதல் என்பது ஒவ்வொரு தனிநபரின் வாழ்விலும் உள்ள மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது.

**மனந்திரும்பு அல்லது அறுப்புண்டு போ (வ. 6-9)**

பின்பு கிறிஸ்து, தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார் என்பதை வலியுறுத்திய ஒரு உவமையைப் பேசினார் (ரோமர் 2:4; 2 பேது. 3:9ஐக் காணவும்), ஆனால் அவரது இரக்கத்திற்கு ஒரு எல்லை உள்ளது (ரோமர் 2:5, 6; எரே. 8:20; ஆமோ. 4:12ஐக் காணவும்). அவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் கனிதரத் தவறிய ஒரு அத்தி மரம் பற்றிய எளிய கதையொன்றைக் கூறினார்.[25] அதற்கு இன்னும் ஒரு வாய்ப்பு தரப்பட வேண்டியிருந்தது. இன்னொரு ஆண்டிற்கும் அதைக் கவனமாகப் பராமரித்து, அப்போதும் அது கனி தரத் தவறினால், அது வெட்டப்பட வேண்டியதாக

இருந்தது. கனி தராத அத்தி மரம் பயனற்றதாக இருந்தது, ஆனால் இது அதற்கும் மேலானதாக இருந்தது; இது கனிதரும் மற்ற மரங்களின் இடத்தையும் சத்துக்களையும் எடுத்துக்கொண்டு, ஒரு தடையாக இருந்தது. இது வெட்டி வீழ்த்தப்படுவது அவசியமாக இருந்தது.

ஒரு இனம் என்ற வகையில் யூதர்களுக்கு இதைப் பற்றிய நடைமுறைப் பயன்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட முடியும். அவர்களுடன் இயேசு ஏறக் குறைய மூன்று ஆண்டுகளாக இருந்தார்; ஆனால், அவர்கள் அவிசுவாசத் தினால் கனி தராத நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு இன்னும் ஒரு வாய்ப்புத் தரப்படும்: கிறிஸ்து இன்னும் ஒரு சில மாதங்கள் அவர்களுடன் இருப்பார். பின்பு அவர் பரத்துக்கேறுதலைத் தொடர்ந்து, பாவத்தைக் குறித்து மனிதர்களுக்கு உணர்த்துவதற்குப் பரிசுத்த ஆவியானவரை எருசலேம் நகரில் அனுப்புவார் (யோவா. 16:8) மற்றும் அவர் [கிறிஸ்து] தமது ராஜ்யத்தை நிலைநாட்டுவார்.[26] அதன் பின்பு, அவர்கள் இன்னமும் மனந்திரும்பாமல் இருந்தால், அவர்கள் தேவனுடைய மக்களாக இராமல் "வெட்டுண்டு" போவார்கள். அழிவானது மூலையைச் சுற்றி அச்சுறுத் திக்கொண்டிருந்தது.[27]

ஆயினும் நாம், இதைப் பிறருக்கு மட்டும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய போதனை களைத் தனிப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். மனந்திரும்பி கர்த்தருக்குக் கனிகொடுப்பவர்களாக இருக்கும் வாய்ப்பைக் கர்த்தர் நாம் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள் ளார்.[28] நாம் நமக்குத் தரப்பட்டுள்ள வாய்ப்பைப் புறக்கணித்தால், ஒரு குறிப்பிட்ட வேளையில் அவர், "அது போதும்! கனி தராமல் இருப்பவர் களை வெட்டி வீழ்த்துங்கள்" என்று கூறுவார். ஞானவானுக்குக் கூறப்பட்ட இவ்வார்த்தைகளைக் கேளுங்கள்: மிகவும் தாமதமாவதற்கு முன், மனந்திரும்பவும் மாற்றம் அடையவும் இப்போதே ஏற்ற வேளையாக உள்ளது.

## அகம் மகிழ்தல்மீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 13:10-21)

### அகம் மகிழாதவர்கள் (வ.10-17அ)

ஒருநாள், இயேசு ஓய்வுநாளில் ஜெப ஆலயம் ஒன்றில் போதித்துக் கொண்டிருக்கையில், உடல் அமைப்பில் மாறுபாடு என்ற வியாதியைப் பதினெட்டு ஆண்டுகளாகக் கொண்டிருந்த ஒரு பெண்ணை குணமாக்கி னார் (வ. 10-13).[29] இந்த அற்புதம், ஓய்வுநாள் பற்றிய இன்னொரு வாக்கு வாதத்தை விளைவித்தது (வ. 14). ஓய்வுநாளன்று ஒரு விலங்கைக் குழியில் இருந்து வெளியே இழுத்து விடுதல் பற்றிய விவரிப்பு ஒன்றைக் கிறிஸ்து இதற்கு முன்பு பயன்படுத்தியிருந்தார் (மத். 12:11, 12). இந்த வேளையில் அவர் அதே போன்ற இன்னொரு விவரிப்பைப் பயன்படுத்தினார்:

*மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார் (வ. 15ஆ, 16).*

அவரது எதிராளிகள் மீண்டும் ஒருமுறை பதிலின்றி "வெட்கப்பட்டார்கள்" (வ. 17அ).

**அகமகிழ்வு அடைந்தவர்கள் (வ. 17ஆ-21)**

கிறிஸ்துவின் விரோதிகள் அகமகிழ்வடையவில்லை, ஆனால் அங்கிருந்த பலர் - அந்தப் பெண் குணமாக்கப்பட்டது பற்றி - அகமகிழ்வடைந்து "அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக் குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்" (வ. 17ஆ). அவர்களின் அகமகிழ்வானது எதிர்கால ஏற்றுக்கொள்ளுதலுக்குச் சுட்டிக்காட்டுதலாக இருந்தது. ராஜ்யத்தின் நிறைவான வளர்ச்சியை முன்னெதிர் நோக்கிய இரண்டு உவமைகளை இயேசு மீண்டும் எடுத்துரைத்தார் (வ. 18-21; மத். 13:31-33ஐக் காணவும்[30]).

## அவிசுவாசத்தின்மீதான பழைய மற்றும் புதிய போதனை (லூக். 13:22; யோவா. 10:22-39)

லூக்கா, இந்த இரண்டு உவமைகளைப் பதிவு செய்த பின்பு, கிறிஸ்து "எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் உபதேசம் பண்ணிக்கொண்டு போனார்" என்று எழுதினார் (லூக். 13:22). இது கர்த்தர் தாம் பயணம் சென்ற இடங்கள் எல்லாவற்றிலும் அவரது கடைசி அடைவிடம் அவரது சிந்தையில் இருந்தது என்ற உண்மையை மட்டும் பிரதிபலிப்பதாக இருக்கலாம். இதற்கு மறுபுறத்தில் இது, இயேசு இந்தக் காலவேளையில் எருசலேம் நோக்கி ஒரு பயணத்தை மேற்கொண்டார் என்றும் சுட்டிக்காண்பிக்கலாம். யோவானின் சுவிசேஷ விவரமானது, பிந்திய கால யூதேய ஊழியத்தின் முடிவுக்கு அண்மையில் இயேசு அந்த நகரத்தைச் சென்று சேர்ந்த ஒரு பயணம் பற்றிக் கூறுகிறது (யோவா. 10:22-39).

பிரதிஷ்டைப் பண்டிகைக்காக இயேசு எருசலேமுக்குச் சென்றிருந்தார் (யோவா. 10:22). இந்தப் பண்டிகையானது யூதர்களின் முக்கியமான பண்டிகைகளில் கடைசியானதாக நிலைநாட்டப்பட்டிருந்தது.[31] இது [பழைய மற்றும் புதிய] ஏற்பாடுகளின் மத்தியில், மக்காபேயரின் விடுதலை இயக்கத்தின்போது தொடங்கியதாக இருந்தது. இது, தேவாலயமானது அந்தியோகஸ் எபிபெனெஸினால் தீட்டுப்படுத்தப்பட்டிருந்த பின்பு (கி.மு. சுமார் 165ல்) மறுபிரதிஷ்டை[32] செய்யப்பட்டதை நினைவுகூரும் விதமாக ஆசரிக்கப்பட்டது. இன்றைய நாட்களில் இந்தப் பண்டிகையானது

“பிரதிஷ்டை” என்ற வார்த்தைக்கு உரிய எபிரெய வார்த்தையான ஹானுக்கா (அல்லது சனுக்கா) என்ற வார்த்தையினால் நன்கு அறியப்படுகிறது. இந்தப் பண்டிகையானது டிசம்பர் மாதத்தில் வருகிறது (யோவா. 10:23அ ஐக் காணவும்). இயேசுவின் நாட்களில், இந்த ஆசரிப்பு எட்டு நாட்கள்[33]நடைபெற்றது மற்றும் இதில் திரளான மக்கள் கூட்டம் வழக்கமாய்க் கலந்து கொண்டது.

**வார்த்தையினால் காண்பிக்கப்பட்ட அவிசுவாசம்**
**(யோவா. 10:23ஆ-30)**

பண்டிகைக் கொண்டாட்டங்களின்போது இயேசு, “தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக் கொண்டிருந்தார்” (வ. 23).[34] இது புறஜாதியாரின் மண்டபத்தினுடைய கிழக்குச் சுவர் முழுவதிலும் இருந்த மூடப்பட்ட ஒரு பகுதியாக இருந்தது. யூதத்துவத் தலைவர்கள்[35] அவரைச் சுற்றிக் கூட்டமாய்ச் சூழ்ந்துகொண்டு, “எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாகச் சொல்லும்” என்று அறைகூவல் விடுத்தார்கள் (வ. 24). கர்த்தர், தாம் மேசியா என்பதை ஒருபொருட்பல சொற்றொடர் களைப் பயன்படுத்தி ஏற்கனவே வெளிப்படையாகச் சுட்டிக் காண்பித்திருந் தார்,[36] ஆனால் அவர் “நானே கிறிஸ்துவாக இருக்கின்றேன்”[37] என்று வெளிப்படையாகக் கூறியிருந்தது இல்லை. அந்த உரிமைகோருதலை எவர் வேண்டுமென்றாலும் ஏற்படுத்த முடிந்திருந்ததே. அவர் தாம் போதித்த மற்றும் செய்த விஷயங்களினால் தாம் மேசியாவாக/கிறிஸ்துவாக இருந்ததைக் காண்பிக்கத் தேர்ந்துகொண்டார் (வ. 25, 37, 38).[38]

அவருடைய விரோதிகள் அவர்மீது விசுவாசம் கொள்வதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவர்கள் அவரைக் கொலைசெய்யக் கூடுவதற் காகத் தேவதூஷணக் குற்றம் சாட்டுவதற்கான வாய்ப்பை மட்டுமே தேடிக்கொண்டிருந்தார்கள்.[39] இயேசு அவர்களுக்குப் பதிலுரையாக, “அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது. ஆனாலும் நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள்” என்றுரைத்தார் (வ. 25, 26).

தமது “ஆடுகள்” என்று பேசியதில், அவர் இந்த அதிகாரத்தின் முற்பகுதி யில் காணப்படுகிற நல்ல மேய்ப்பனின் விவரிப்பைத் தேர்ந்துகொண்டார் (வ. 1-18). அவர் தமது ஆடுகளுக்கான - அதாவது, தம்மை விசுவாசித்துத் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கான - தமது மற்றும் தமது பிதாவின் பாரமரிப்பைப் பற்றிப் பேசினார் (வ. 27-29[40]). அவர், “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்று கூறினார் (வ. 30).

**செயல்களினால் காண்பிக்கப்பட்ட அவிசுவாசம்**
**(யோவா. 10:31-39)**

கிறிஸ்துவின் துடுக்குத்தனம் அவரது விரோதிகளுக்கு மூர்க்கமான

கோபத்தை ஏற்படுத்திற்று, மற்றும் அவர்கள் மீண்டும் ஒருமுறை அவரைக் கொல்வதற்குக் கல்லுகளைப் பொறுக்கினார்கள் (வ. 31; யோவா. 8:59ஐக் காணவும்). அவர்கள் இயேசுவிடம், "... நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி இவ்விதமாகத் தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால்'' அதைச் செய்ததாகக் கூறினார்கள் (10:33). அவர், நியாயப் பிரமாணமானது தேவனுடைய பிரதிநிதிகளை ''தேவர்கள்'' என்று சிலவேளைகளில் அழைத்ததே என்று பதில் உரைத்தார் (வ. 34; சங். 82:6ஐக் காணவும்).[41] அது தேவதூஷணமாக இருந்ததில்லை என்றால், "தேவன்" என்ற பட்டப்பெயருக்கு உண்மையிலேயே பாத்திரரான ஒருவரை அவ்வாறு குறிப்பிடுவது எவ்வளவு குறைவான அளவுக்குத் தேவதூஷணமாயிருந்தது (வ. 35,[42] 36)! அவர், தாம் தேவனுடைய குமாரனா அல்லவா என்பதை அறிவதற்கு தமது கிரியைகளைப் (அற்புதங்களை) பரிசோதிக்கும் படி அவர்களிடத்தில் அறைகூவல் விடுத்தார் (வசனங்கள் 37, 38).

கவனிக்க மறுத்த அவர்கள், அவரைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தார்கள் (வ. 39அ; யோவா. 7:44ஐக் காணவும்). அவர் மீண்டும் அவர்களின் பிடியில் இருந்து தப்பினார் (வ. 39ஆ; யோவா. 8:59ஐக் காணவும்).

## கிறிஸ்துவின் அக்கறைமீதான பழைய மற்றும் புதிய போதனை (மத். 19:1, 2; மாற். 10:1; லூக். 13:23-35; யோவா. 10:40-42)

மீண்டும் ஒருமுறை, எருசலேம் நகரம் இயேசுவுக்குத் தனது கதவுகளை அடைத்திருந்தது. தற்போதைக்கு அங்கு அவரது ஊழியம் செய்யப் பட்டிருந்தது.[43] அவரும் அவரது சீஷர்களும் யூதேயாவை விட்டுப் புறப் பட்டு, அவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட கிழக்குப் பகுதிக்குப் பயணமாகச் சென்றார்கள்: "யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிபோய், அங்கே தங்கினார்" (யோவா. 10:40). அந்தப் பகுதி பெரேயா என்று அறியப்பட்டிருந்தது.[44]

பெரேயா யூத எல்லைகளின் பகுதியாக இருந்தது என்று கருதப்பட்டது. அதன் குடிமக்கள், கலிலேயா மற்றும் யூதேயா ஆகிய பகுதிகளில் இருந்த அதே மதரீதியான மற்றும் சமுதாய ரீதியான சட்டங்களுக்குக் கீழ்ப் பட்டிருந்தார்கள். இருப்பினும், [யோர்தான்] நதிக்கு மேற்குப் பகுதியில் இருந்ததால், யூதர்களால் முக்கியத்துவமற்ற பகுதியாகக் கருதப்பட்டது. கிறிஸ்து அவ்விதமான கருத்தைக் கொண்டிருக்கவில்லை; பெரேயா பகுதியானது இரட்சிப்பு தேவைப்பட்ட மக்களால் நிரம்பியிருந்தது. அவரது அடுத்த மூன்றரை மாதங்களின் பெரும்பகுதியானது அங்கே செலவிடப்பட்டது.[45]

அந்தப் புதிய பகுதியில் அவர் வெற்றியை மகிழ்வுடன் அனுபவித்தார்: ''திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்'' (மத். 19:2). அவர்களுக்கு அவர் போதித்தார் (மாற். 10:1), அவர்களைக் குணமாக்கினார்

*(மத். 19:2), மற்றும் அசுத்த ஆவிகளைத் துரத்தினார் (லூக். 13:32). "அநேகர் அவரிடத்தில் வந்து: 'யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை;[46] ஆகிலும் இவரைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யா யிருக்கிறது' என்றார்கள். அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாச முள்ளவர்களானார்கள்" (யோவா. 10:41, 42).*

*இயேசுவின் பெரேயா ஊழியத்திலிருந்து இரண்டு நிகழ்ச்சிகளுடன் நாம் இந்தப் பாடத்தை முடித்துக் கொள்வோம்: இயேசுவிடம் இருந்து ஒரு எச்சரிக்கை மற்றும் இயேசுவுக்கு ஒரு எச்சரிக்கை.*

**இயேசுவிடம் இருந்து ஒரு எச்சரிக்கை (லூக். 13:23-30)**

*ஒருநாள், கிறிஸ்து போதித்துக் கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் அவரிடத்தில், "ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" என்று கேட்டார் (லூக். 13:23அ). இது ஒருவேளை, மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் கெட்டுப்போவார்கள் (லூக். 13:1-5) என்ற அவரது முந்திய போதனைக்குப் பதில்செயலாக இருந்திருக்கலாம். மலைப் பிரசங்கத்தில் இயேசு, ஒரு சிலரே இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறியிருந் தார் (மத். 7:13, 14). இவ்வேளையில் அவரது பதிலுரையானது, யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள் மற்றும் யாரெல்லாம் இரட்சிக்கப்படமாட்டார் கள் என்ற போதனையின் தேர்ந்தெடுத்த தொகுப்பாக இருந்தது:*

- *இரட்சிப்பின் வழியானது குறுகலானதாகவும் கடினமானதாகவும் உள்ளது (லூக். 13:24; மத். 7:13, 14உடன் ஒப்பிடவும்).*
- *தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்று நினைக்கின்ற சிலர் இரட்சிப் படையாமல் போவார்கள் (லூக். 13:25-27; மத். 7:21-23உடன் ஒப்பிடவும்).*
- *சிலர் (புறஜாதியார்) இரட்சிக்கப்படுவது சாத்தியம் என்று யூதர்கள் நினைக்காமல் இருந்தாலும், அவர்கள் (புறஜாதியார்) இரட்சிக்கப் படுவார்கள் (லூக். 13:28-30; மத். 8:11, 12உடன் ஒப்பிடவும்).*

*கேள்வி கேட்டவர், இரட்சிக்கப்படுபவர்களின் குறிப்பான எண்ணிக்கை என்பது முக்கியமான விஷயமல்ல, ஆனால் அந்த எண்ணிக்கை யின் மத்தியில் அவர் இருக்கின்றாரா இல்லையா என்பதே முக்கியமான விஷயமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று கிறிஸ்து விரும்பினார்.*

**இயேசுவுக்கு ஒரு எச்சரிக்கை (லூக். 13:31-35)**

*இயேசுவிடத்தில், "நீர் இவ்விடத்தை விட்டுப் போய்விடும்; ஏரோது உம்மைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறான்" என்று கூறிய (வ. 31) பரிசேயர்களால் அவர் [இயேசு] இடைமறிக்கப்பட்டார். அவர்கள் குறிப்பிட்ட அபாயம் உண்மையானதாக இருந்தது. ஏரோது கலிலேயாவின் மீது ஆட்சி செலுத்தியது போன்றே பெரேயாவின்மீதும் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார். பெரேயா மாகாணத்தில்தான் யோவான் ஸ்நானன் சிறைவைக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். மற்றும், முந்திய ஒரு*

*பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, ஏரோது இயேசுவைப் பற்றி ஆரோக்கிய மற்ற ஒரு ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, அவரைத் தேடிக்கொண்டிருந் தார் (மாற். 6:14; லூக். 9:9; 23:8ஐக் காணவும்).*

*பரிசேயர்கள் இயேசுவை இவ்விதமாய் எச்சரித்தது ஏன் என்பது தெளிவற்றதாக உள்ளது. அவர்கள் அவரது நலனில் அக்கறை கொண்டிருந் தார்கள் என்பது ஏற்கப்படுவதாக இருக்கவில்லை. அவர்கள் பெரேயாவில் வாழ்ந்தவர்களாய் இருந்தால், இயேசு அங்கு ஒரு கலகத்தைத் தூண்டுமுன்பு அவ்விடம் விட்டு அவர் சென்றுவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பி யிருக்கலாம். அவர்கள் எங்கு வாழ்ந்திருந்தாலும், ஒருவேளை அவர்கள், சனதெரீன் சங்கம் தங்கள் மாபெரும் அதிகாரத்தைக் கையாண்டு கொண்டிருந்த யூதேயாவுக்கு அவர் திரும்புவதைப் பெரிதும் விரும்பி யிருக்கலாம்.*

*இயேசு ஏரோதுவைப் பற்றி அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை அவரது பதில் சுட்டிக் காண்பித்தது, ஆனால் அவர் பதிலளித்த வகையானது அநேகமாகப் பரிசேயர்களைத் திகைப்படையச் செய்திருக்க வேண்டும். அவர், நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ள வர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்.[47] (வச. 32). இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாட வேண்டும் ... என்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச்[48] சொல்லுங்கள்" என்றார் (வ. 32, 33). இவை யாவையும், "நான் செய்யவேண்டிய வேலை உள்ளது, ஏரோது என்ன கூறினாலும் அல்லது என்ன செய்தாலும் நான் எனது வேலையை நிறைவேற்றுவேன்" என்று கூறும் மறைவான வழிமுறை யாக இருந்தது. பின்பு அவர், "எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லை" என்றும் கூடக் கூறினார் (வ. 33ஆ). மறைவான நகைச்சுவையுடன் ஒலித்த இந்தக் கூற்று, "பெரேயாவில் ஏரோது என்னைக் கொல்லுவான் என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம், ஏனெனில் நான் எருசலேமில் மரிக்க வேண்டியிருக்கிறது. அங்குதானே நீங்கள் தேவனுக் காகப் பேசிய பலரைக் கொன்றிருக்கின்றீர்கள்!" என்று அர்த்தப்படுத்துவதா யிருக்கிறது. அந்தக் குறிப்பானது எருசலேமைப் பற்றிய ஒரு சோகமான கூக்குரலினால் தொடரப்பட்டது (வ. 34, 35).[49]*

## *முடிவுரை*

*பழம்பொருட்களைச் சேகரிப்பவர்கள் பழைய பொருட்களை மதிக்கின்றார்கள். அவர்கள், ''இன்று மக்கள் பொருட்களை நீண்ட காலத்திற்கு இருப்பது போல் செய்வதில்லை'' என்று வலியுறுத்துகின் றார்கள். மற்றவர்கள் புதிய பொருட்களை விரும்புகின்றார்கள்: அவர்கள் ஒவ்வொன்றிலும் நவீனமானதை விரும்புகின்றார்கள். அவர்கள், ''அது புதியதாய் இருந்தால், அது மேன்மையானதாக இருக்கிறது'' என்று நினைக்கின்றார்கள். உண்மையிலேயே "பழைய மற்றும் புதிய விஷயங்கள்" இரண்டும் இருக்கும் ஒரு இடம் உள்ளது. எடுத்துக்காட்டாக, நான் ஒரு மருத்துவரிடம் செல்லும்போது, அவர் எனக்கு நவீன மருத்துவத்தின் மிக*

*முன்னேறிய முறையைக் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நான் விரும்புவேன். அதே வேளையில், அவர் தமது நோயாளிகளுக்கான பழைய பாணியான அக்கறை கொண்டிருக்க வேண்டும் என்றும் நான் விரும்புவேன். இந்தப் பாடத்தில், இயேசு "பழைய" போதனையை மீண்டும் போதித்து, ஆனால் பழைய சத்தியங்களின்மீது "புதிய" உட்கண்ணோக்கு களையும் கொடுத்ததை நாம் கண்டுள்ளோம். தேவனுடைய வசனமானது பழமையானதாக இருக்கையில், அது என்றென்றும் புதியதாகவும் உள்ளது என்பது அதைப் பற்றிய ஆச்சரியமான விஷயமாக உள்ளது!*

## குறிப்புகள்

*நாம் படித்துள்ள வேத வசனப் பகுதிகள் பிரசங்கித்தலுக்குப் பல சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. பொருளாதாயக் கொள்கை பற்றிய கிறிஸ்துவின் போதனையானது (லூக். 12:13-34) "விஷயங்கள்/பொருட்கள் உங்களைக் கீழே தள்ளிவிட அனுமதிக்காதீர்கள்" என்ற ஒரு பிரசங்கத்திற்கு வேத பாடப் பகுதியாக இருக்க முடியும். செல்வந்தனான ஒரு மதியீனனைப் பற்றிய உவமையின்மீதான (லூக். 12:13-21) ஒரு பிரசங்கம் இந்தப் பாடத்திற்கு அடுத்து வருகிறது. மனந்திரும்புதல் பற்றிய பிரசங்கங்களைக் காட்டிலும் மாபெரும் தேவையுள்ள பிரசங்கம் அநேகமாக வேறெதுவும் இருப்பதில்லை (லூக். 13:1-5). காய்க்காத அத்தி மரம் பற்றிய உவமையை (லூக். 13:6-9), கனிதரும் கிறிஸ்தவராயிருத்தலின் பொறுப்பு பற்றிய பிரசங்கம் ஒன்றிற்கு நீங்கள் பயன்படுத்த முடியும்.*

---

குறிப்புகள்

[1]*ஏவுதலை மறுக்கின்ற சிலர், இயேசு இதையோ அல்லது அதையோ எங்கு போதித்தார் என்பது பற்றி சுவிசேஷ விவரங்களை எழுதியவர்கள் குழப்பமுற்று இருந்தார்கள் என்பதாகக் கூறுகின்றனர். கிறிஸ்து ஒரே போதனையை இருமுறை கொடுத்திருக்க மாட்டார் - இருப்பினும் அவர்கள் தாங்களே தங்களுக்குப் பிரியமான பாடக் கருத்துக்களை அடிக்கடி மீண்டும் கூறினார்கள் என்று இவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். மற்றும், தேவன் பத்துக் கட்டளைகளை மீண்டும் கூறியிருந்தார் (யாத். 20; உபா. 5). பிதா அவ்வாறு செய்திருந்தால் குமாரனும் ஏன் அவ்வாறு செய்திருக்கக் கூடாது?* [2]*"நாம் 'ஜீவன்' என்பதற்கு ஒரே ஒரு வார்த்தையைக் கொண்டிருக்கையில், கிரேக்க மொழியில் இது இரு வார்த்தைகளை உடைய வளம் கொண்டு இருக்கிறது - ஒரு வார்த்தை [bios என்பது] நாம் வாழும் வாழ்வைக் குறிக்கையில், இன்னொரு வார்த்தை [zoa என்பது] நாம் எதினால் வாழ்கின்றோமோ அதைக் குறிக்கிறது; மற்றும் இந்தப் பிந்தியதைப் பற்றியே கிறிஸ்து இவ்விடத்தில் பேசினார்"* (Richard C. Trench, *Notes on the Parables of Our Lord* [Westwood, N.J.: Fleming H. Revell Co., 1953], 338; emphasis his). [3]W. E. Vine, *"pleonexia," The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 245. [4]*இந்த உவமைமீதான ஒரு கலந்துரையாடலை, அடுத்து வரும் "வெற்றிகரமான வியாபாரியின் தவறுகள்" என்ற பிரசங்கத்தில் காணவும்.* [5]*லூக்கா, மலைப் பிரசங்கத்தின் பெரும்பகுதியை லூக். 6ல்*

பதிவு செய்தார், ஆனால் இந்தப் போதனையின் ஒரு பகுதியை அவர், அடிப்படைச் சிந்தனைகளைக் கர்த்தர் பின்பொரு வேளையில் மீண்டும் கூறும் வரையிலும் பதிவு செய்யாதிருந்தார். லூக். 12:22-31ஐ மத். 6:25-34உடனும், லூக். 12:33, 34ஐ மத். 6:19-21உடனும் ஒப்பிடவும். [6]தேவன் அவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தார்; அவர் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று ராஜ்யத்தை/சபையை ஸ்தாபித்தார் (அப். 2). [7]1 தீமோ. 6:17-19ஐயும் காணவும். இயேசு பிற்பாடு இந்தக் கட்டளையை ஒரு பணக்கார இளைஞரான அதிகாரிக்குக் கொடுத்தார் (மத். 19:21ஐக் காணவும்). [8]This illustration was adapted from Augustine by Trench, 341. [9]See the KJV. [10]Neil R. Lightfoot, *The Parables of Jesus,* Part 1 (Austin, Tex.: R. B. Sweet, Co., 1963), 74.

[11]இது கர்த்தருடைய இரண்டாவது வருகைக்கான தெளிவான இரண்டாம் குறிப்பாக உள்ளது. மத். 16:27 முதலாவதாகும். [12]இயேசு "உவமை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை, ஆனால் பேதுரு பயன்படுத்தினார் (லூக். 12:41). நாம் பொதுவாக விவரிப்பு என்று அழைக்கும் விஷயத்தை அர்த்தப்படுத்தப் புதிய ஏற்பாடு "உவமை" என்ற வார்த்தையைச் சிலவேளைகளில் பயன்படுத்துகிறது என்பதைச் சிந்தையில் வைக்கவும். [13]மத். 24:43ல் இயேசு, அறிவிப்பின்றி வரும் கள்ளன் பற்றிய விவரிப்பை மீண்டும் கூறினார். இந்த விவரிப்பு அவரது இரண்டாம் வருகைக்கான காலத்தைக் குறிக்க விரும்புபவர்களை என்றென்றைக்கும் வாயடைப்பதாக இருக்கும். [14]விளக்குகள் மற்றும் திருமண விழா ஆகியவை பற்றிய குறிப்பு, இதே அடிப்படைச் செய்தியைக் கொண்ட ஒரு பிந்திய உவமையை நமக்கு நினைவூட்டுகிறது (மத். 25:1-13). [15]கர்த்தர் இந்த விவரிப்பைத் தமது பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தின்போது மீண்டும் பயன்படுத்தினார் (மத். 24:45-51). [16]லூக். 12:46ன்-படி, "எஜமான் வந்து அவனைக் கடினமாய்த் தண்டிப்பார்" என்றுள்ளது. ஆங்கிலத்தில் இது "cut [the unfaithful steward] in pieces" என்றுள்ளது. இது கிரேக்க வேத வசனத்திலிருந்து நேரடியாகத் தரவழைக்கப்பட்ட அர்த்தமாக உள்ளது, ஆனால் இந்தக்கூற்றை, அம்மனிதரின் உடல் துண்டுதுண்டாக்கப்படும் என்று அர்த்தப்படுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. (இவ்வசனத்தின் அடுத்த பகுதி, அவன் தன் பொறுப்பிலிருந்து நீக்கப்படுதலைப் பற்றிப் பேசுகிறது, இது அவன் சிதைக்கப்பட்டிருந்தால் சாத்தியமாகாது.) இது தமிழ் வேதாகமத்தில் உள்ளதுபோல், அவன் பெறக்கூடிய கடுமையான தண்டனையையே குறிப்பதாயிருக்கும். [17]லூக். 12:47, 48ன் வார்த்தைகள் கர்த்தர் நோக்கங் கொண்டிருந்தவற்றிற்கு மேலாக வலியுறுத்தப்பட்டால், *அறியாமை* என்பது மதிக்கக்கூடியது என்ற முடிவை நாம் அடையலாம், இது உண்மையற்றதாக உள்ளது (யோவா. 8:32; அப். 17:30ஐக் காணவும்). [18]தேவன் நம்மை ஆசீர்வதித்துள்ள வழிமுறைகளைப் பட்டியலிடவும், அத்துடன் அந்த ஆசீர்வாதங்களுடன் பொறுப்பும் வருகிறது என்பதை வலியுறுத்தவும் நீங்கள் விரும்பலாம். நீங்கள் இந்தப் பாடத்தைப் பெறுவதற்குத் தகுதியானவர் என்று கர்த்தர் கண்டார் என்ற உண்மையானது உங்கள்மீது கூடுதலான பொறுப்பை வைக்கிறது. [19]மாற். 10:38, 39ஐக் காணவும். "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையானது, "முழுக்காட்டப்படுதல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. உவமை வகையில் பயன்படுத்தும்போது, "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை மூழ்கடிக்கப்படுதல் என்பதைக் குறிப்பிடக்கூடும். சிலுவையில் கர்த்தர் துன்புறுதலில் *மூழ்கடிக்கப் பட்டார்.* [20]A. T. Robertson, *Epochs in the Life of Jesus* (London: Hodder and Stoughton, n.d.), 127; quoted in Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 179.

[21]பிறருடன் சமாதானமாக வாழ முயற்சித்தல் பற்றிய அதிகமான கருத்துக்களுக்கு, பின்வரும் வசனப்பகுதிகளைக் காணவும்: மத். 5:9; ரோமர் 12:18;

*14:19; 1 தெச. 5:13; யாக். 3:17; 1 பேது. 3:11.* [22]*இந்தத் துன்பகரமான நிகழ்ச்சியைப் பற்றிய செய்தியானது, இயேசு இருந்த பகுதியில் அப்போதுதான் வந்து சேர்ந்திருக்கலாம். மக்களில் பலர், நித்தியமான சத்தியங்களைவிட தற்காலச் செய்திகளின்மீது அதிக ஆர்வம் கொண்டு இருக்கின்றார்கள். கலிலேயர்கள் பலி செலுத்தும்போது அவர்களைப் பிலாத்து கொன்றது ஏன் என்பதைப் பற்றி ஜான் F. கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு யூகித்துள்ளார்: "அவர்கள் ரோமாபுரிக்கு எதிராக ஒரு கலகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார்களா? அப்படிப்பட்ட ஒரு கலகத்தைச் செயல்படுத்துவதற்காக அவர்கள் தங்களையே தகனபலியாக அர்ப்பணித்து இருந்தார்களா? அவர்கள் குற்றவாளிகள் அல்லவென்றால், பிலாத்து அவர்களை அரசுக்கு எதிராகச் செயல் பட்டார்கள் என்று சந்தேகித்தாரா?"* (John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* [Nashville: Broadman Press, 1961], 205). [23]*"சீலோவாம் கோபுரம்" என்பது எருசலேமில் சீலோவாம் குளத்தின் அருகில் இருந்திருக்கச் சாத்தியக்கூறு உண்டு, ஆனால் நமக்கு ஏவுதல் பெற்ற அல்லது ஏவுதல் பெறாத பதிவேடுகள் எதிலும் இதைப் பற்றிய குறிப்பு கிடைப்பதில்லை.* [24]*இதே போன்ற கேள்வியொன்று யோவா. 9:2ல் பார்வையற்ற மனிதரைப் பற்றியும் எழும்பிற்று.* [25]*இது, ஒரு அத்திமரம் கனிகொடுக்கும் பக்குவ நிலையை அடைவதற்கு மூன்று ஆண்டுகளை எடுத்துக்கொண்டது என்ற உண்மையைக் குறிப்பிடலாம்.* [26]*நாம் நேரடியாக இன்னும் ஒரு ஆண்டு என்று இவ்விடத்தில் எடுத்துக் கொள்வோம் என்றால், இது கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசிச் சில மாதங்களையும் அத்துடன் எருசலேமில் சபை இருக்கத் தொடங்கிய முதல் சில மாதங்களையும் சுற்றியிருக்கும்.* [27]*இயேசுவை யூத இனத்தவர் புறக்கணித்தலின் விளைவுகளினுடைய உச்சக்காட்சியானது கி.பி. 70ல் வந்து சேர்ந்தது, அப்போது எருசலேம் ரோமாபுரி யாரால் அழிக்கப்பட்டது. வரவிருந்த அந்த அழிவானது இந்த வேளையில் கிறிஸ்துவின் சிந்தையில் இருந்திருக்கலாம் (லூக். 12:34, 35ஐக் காணவும்).* [28]*நாம் ஒவ்வொருவரும் ''கனி தருபவர்களாய்'' இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (மத். 7:20; ரோமர் 7:4; கலா. 5:22, 23; பிலி. 1:11; தீத்து 3:14).* [29]*அவள் தண்டுவடத்தில் ஒரு கோளாறைக் கொண்டிருந்தாள் என்பது உறுதி. வேத பாடப்பகுதியானது, அந்தப் பெண்மணி ''பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்டிருந்தாள்" என்று கூறுகிறது (இது வசனம் 11ல் கிரேக்க மொழியில் இருந்து நேரடியாகத் தரவழைக்கப்பட்டதாக உள்ளது;* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில் காணவும்), மற்றும் இயேசுவும் அவள் சாத்தானால் "கட்டப்பட்டிருந்ததாக'' சுட்டிக்காண்பித்தார் (வ. 16). இது, அவள் அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டதால் துன்புற்றாள் என்று அர்த்தப்படுத்தலாம்; ஆனால் வியாதியைப் பற்றிய விவரிப்பும் குணமாக்குதலில் இயேசு பயன்படுத்திய வகைமுறையும், இது உடல்ரீதியான கோளாறு என்பதற்கே நன்கு பொருந்துகிறது. பவுல் அசுத்த ஆவியினால் பிடிக்கப் பட்டவராக இல்லாதிருந்தபோதிலும், அந்த அப்போஸ்தலரின் உடலில் இருந்த "மாம்சத்தின் முள்ளானது," "சாத்தானுடைய தூதன்" என்று அழைக்கப்பட்டது (2 கொரி. 12:7).* [30]*இந்த உவமைகளைப் பற்றிய இயேசுவின் முந்திய பயன்பாடு உண்மையாக இருந்தது போலவே, லூக். 13:18-21 வசனப்பகுதியானது, அவரது உரையைக் கேட்டவர்களை அவரது விரோதிகளின் செல்வாக்கைத் தவிர்க்கும்படியான ஒரு எச்சரிப்பாக இருந்திருக்கலாம். ஆயினும், மீண்டுமாக சந்தர்ப்பப் பொருளானது அதிகம் நேர்மறையான பயன்பாட்டை அழைக்கிறது.*

[31]*"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "யூதர்களின் பண்டிகைகள்" என்ற அட்டவணையைக் காணவும்.* [32]*தேவாலயத்தின் "மறு அபிஷேகம்" என்பது இங்கு பயன்படுத்தியிருக்கக் கூடிய இன்னொரு சொற்றொடராக இருக்கலாம். தள்ளுபடியாகம ஆதாரமூலம் ஒன்று (2 மக்காபேயர் 10:5) "பரிசுத்தஸ்தலத்தைச்*

*சுத்திகரித்தல்'' என்பது பற்றிப் பேசுகிறது. [33]யூதர்களின் புராணத்தின்படி, புதிய எண்ணெய் பெற்றுக்கொள்ளப்படும் வரையிலும் ஒரு நாளில் ஊற்றும் எண்ணெயானது எட்டு நாட்களுக்கு [விளக்குகளை] எரிக்கப் போதுமானதாக இருந்தது. இன்றைய நாட்களில் இந்தப் பண்டிகை தீபங்களின் பண்டிகை என்றும் அறியப்படுகிறது. எட்டுக் கிளைகளையுடைய சரவிளக்கு (புனித விளக்கு) இந்தப் பண்டிகையின் அடையாளமாக உள்ளது. பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு மெழுகுதிரி ஏற்றி வைக்கப்படும், இப்படியாக எல்லா எட்டு விளக்குகளும் எறியுமாறு ஏற்றி வைக்கப்படும். [34]பிற்பாடு பேதுரு தமது இரண்டாவது சுவிசேஷப் பிரசங்கத்தை இவ்விடத்தில் பிரசங்கிப்பார் (அப். 3:11). இது எருசலேமில் இருந்த தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் கூடிவருமிடமாயிற்று என்பது தெளிவு (அப். 5:12ஐக் காணவும்). யூதர்களின் பாரம்பரியத்தின்படி, சாலொமோன் மண்டபத்தின் சுவர், முன்பு சாலொமோனால் கட்டப்பட்ட தேவாலயத்தின் எஞ்சிய பகுதியாக இருந்தது. (அப். 3:11 வசனம், "சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபம்'' பற்றிப் பேசுகிறது.) [35]யோவான் சுவிசேஷத்தின் இந்தப் பகுதியில், "யூதர்கள்" என்ற சொற்றொடர் (யோவா. 10:24) வழக்கமாக யூதத்துவத் தலைவர்களைக் குறிப்பிட்டது. [36]எடுத்துக்காட்டாக, அவர் மேசியாவுக்கு தானியேல் உரைத்த சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்தினார்: ''மனுஷ குமாரன்'' (மத். 8:20; 9:6; 10:23; 12:8). அவர் கிறிஸ்துவாக/தெய்வீகமானவராக/தேவனுடைய குமாரனாக இருப்பதாக உரிமைகோரியதைப் புரிந்துகொள்வதில் யூதத்துவத் தலைவர்களுக்குச் சிரமம் எதுவும் இருந்ததில்லை: அதுவே அவர்கள் அவரைக் கொலைசெய்ய விரும்பியதற்கு ஒரு காரணமாக இருந்தது (யோவா. 5:18ஐக் காணவும்). இருந்தபோதிலும், அவரை மரணத்திற்கு உட்படுத்த மிகச் சிறந்த வழக்கு ஒன்றை அவர்மீது சுமத்தும்படிக்கு, அவர் தாமே கிறிஸ்து என்று "தெளிவாக" மற்றும் வெளிப்படையாகக் கூற வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். [37]அவர் தனிப்பட்ட வகையில், ''கிறிஸ்து'' என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தார் (மத். 16:16, 17, 20). நமது படிப்பின் இந்த வேளை வரையிலும் இயேசுவுக்கு ''கிறிஸ்து'' என்று பட்டம் சூட்டப்பட்ட உதாரணங்களுக்கு, மாற். 9:41; லூக். 2:11, 26; யோவா. 1:41; 4:25, 29; 9:22 ஆகிய வசனங்களைக் காணவும். [38]அவரது மறைமுகமான அணுகுமுறையானது, கடைசியில் அவருக்கு மரணத்தை விளைவிக்கக் கூடிய அவரது விரோதிகளுடனான வாக்குவாதத்தைத் தவிர்க்கவும் செய்தது. [39]கடைசியில், அவர்கள் அவர் தம்மைக் கிறிஸ்துவாக இருந்தார் என்று ஒத்துக்கொண்டு அந்த ஒப்புகையை சத்தியம் செய்யும்படி வற்புறுத்தினார்கள். பின்பு அவர்கள் அவரைத் தேவதூஷணக் குற்றம் செய்ததாக மரணத்திற்குத் தீர்வையிட்டார்கள் (மத். 26:63-68). [40]''விசுவாச விலக்கத்தின்'' சாத்தியமற்ற நிலைமையை நிரூபிக்க முயற்சி செய்வதற்குச் சிலவேளைகளில் யோவா. 10:28, 29 வசனப்பகுதி பயன்படுத்தப் படுகிறது. தேவன் தமது ஆடுகளைப் பராமரிக்கின்றார் என்பதே இவ்வசனப் பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது. இது மனிதகுலத்தின் சுயாதீன சித்தத்தை இல்லாமற் செய்வதில்லை. ஆடுகள் வேலியைத் தாண்டிச் செல்லுபவை என்று அறியப்படுகின்றன, மற்றும் தேவனுடைய ஆடுகளும்கூட பாதுகாப்புள்ள அவரது கரத்தைவிட்டுத் தாண்டிச் செல்லக்கூடும். இவ்வசனப் பகுதியானது, தேவனுடைய பிள்ளை விழுந்துபோவதில்லை (1 கொரி. 10:13) என்று போதிப்பதில்லை, ஆனால் இது, நாம் தேவனுடைய பாதுகாப்பின் நிழலின் கீழ் இருக்கத் தேர்ந்துகொள்ளும் வரையிலும், நம்மை ''பறித்துக்'' கொண்டு போவதற்கு எவரொருவரும் அதிகாரம் கொண்டிருப்பதில்லை என்றே போதிக்கிறது.*

*[41]மார்மன்கள் என்ற மதப்பிரிவினர் சங். 82:6 மற்றும் யோவா. 10:34 ஆகிய*

*வசனங்களை வினோதமாகப் பயன்படுத்துகின்றார்கள், அவர்கள், நாம் ஆராதிக்கின்ற தேவன் ஒரு காலத்தில் நம்மைப் போலிருந்தார் (அதாவது, மனிதராக இருந்தார்) மற்றும் நாம் தேவனைப் போலாக முடியும் (அதாவது, தேவர்களாக முடியும்) என்று போதிக்கின்றார்கள். இது, மறைவான மற்றும் வழக்கிற்கு உரிய வசனப்பகுதியை உபதேசமாகக் கொள்வதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. தேவன் இவ்விதமாகத் தமது சித்தத்தை வெளிப்படுத்தவில்லை.* [42]*வசனம் 35ல் பின்வரும் வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: "வேதவாக்கியமும் தவறாததாயிருக்க." இது, ஏவுதல் பெற்ற வசனம் எடுத்துப் போடப்படவோ அல்லது ஒதுக்கி வைக்கப்படவோ முடியாததாக உள்ளது என்று அர்த்தப்படுகிறது. இதை அவிசுவாசமான உலகம் அறிய வேண்டியது அவசியமாக உள்ளது!* [43]*அது இயேசு பஸ்காவுக்காகவும் தமது மரணத்திற்காகவும் எருசலேமுக்குத் திரும்பி வருவதற்கு முந்திய கடைசிப் பயணமாக இருந்தது.* [44]*''இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தைக் காணவும்.* [45]*அவர் யூதேயாவில் இருந்த பெத்தானிக்கு திரும்ப ஒரு பயணம் மேற்கொண்டார் (யோவா. 11). அவர் பலஸ்தீனத்தின் மற்ற பகுதிகளுக்கும் சென்றிருக்கலாம். (குறிப்புகளுக்குக் கீழ் உள்ள வரைபடத்தைக் காணவும். பெரேயாவில் இருந்து ஒருவர் பலஸ்தீனத்தின் பிறபகுதிகளை அடைய யோர்தானைக் கடக்க முடிந்திருந்தது.) இருப்பினும், அவரது காலத்தின் பெரும்பகுதியானது பெரேயாவிலேயே செலவிடப்பட்டது. இந்த ஊழியத்தைப் பற்றி நான்கு சுவிசேஷ விவரங்களும் குறிப்பிடுகின்றன (மத். 19:1, 2; மாற். 10:1; யோவா. 10:40), ஆனால் இந்தக் கால வேளைபற்றி நமக்கு அடிப்படை ஆதாரமூலமாக இருப்பது லூக்கா சுவிசேஷமேயாகும்.* [46]*இந்தக் கூற்றானது, யோவான் ஸ்நானனின் ஊழியம் பற்றி வேறு எவ்விடத் லும் காணப்படாத ஒரு விவரத்தைக் கூடுதலாகக் கூறுகிறது: அவர் அற்புதம் எதுவும் செய்ததில்லை.* [47]*''நான் எனது இலக்கை அடைய வேண்டும்''* [இது NASB*யில்* *உள்ளது*] *என்பதற்குப் பதில்* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில் ''நான் நிறைவடைவேன்'' என்றுள்ளது. "நிறைவடைவேன்'' என்பது "முடிவு" அல்லது "முடித்தல்" என்று அர்த்தப்படுகிற ஒரு கிரேக்க வார்த்தையின் வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. சிலுவையில் இயேசு "முடிந்தது" என்று கூறியபோது இதே வார்த்தையையே பயன்படுத்தினார் (யோவா. 19:30). "இலக்கு'' என்று* NASB*யில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லானது, அவரது மரணம் மற்றும் அந்த மரணத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லாவற்றையும் குறித்தது.* [48]*தமிழில் நாம், "நரித் தந்திரம்'' என்று கூறுகின்றோம். அது ஏரோதுக்கு ஒரு நல்ல விவரிப்பாக இருக்கும். மெக்கார்வீயின் கூற்றுப்படி, இது ஒன்று மட்டுமே, தனிநபரைப் பற்றி ''இயேசுவால் பேசப்பட்டவையாகப் பதிவு செய்யப்பட்டவற்றிலேயே இகழ்ச்சியான வார்த்தையாக உள்ளது"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 710). [49]*அந்தக் கூக்குரலானது மத். 23:37-39ல் மீண்டும் எழுப்பப்பட்டது.*